# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:S.C.No.119/2025
Prosecution Witness P.W.2

| | |
|---|---|
| Name : **திரு.பெரியசாமி** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

எதிரிகள் ஆஜர்
**நாள்: 27.01.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் பழனிசெட்டிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன், ஆட்டோ டிரைவராக வேலை செய்து வருகிறேன். கடந்த 06.11.2024 ம் தேதியன்று கடந்த ஆறு 11 2024 ஆம் தேதி அன்று மாலை சுமார் 05.00-05.30 மணியளவில் புகார்தாரர் போஜராஜா பதட்டமாக வந்தார், நான் என்னவென்று கேட்டேன். அணை தடுப்பு பகுதியில் தனது மகனை அடித்து போட்டு இருப்பதாக தகவல் சொல்லி அங்கு செல்ல வேண்டுமென சொன்னார். போகும் பொழுது அவரது உறவினர்களுக்கு போன் செய்து தகவல் சொன்னார்.

2. மற்ற நான்கு நபர்களும் புகார்தாரரின் உறவினர்களுடன் சம்பவ இடத்திற்கு நாங்கள் செல்லும் பொழுது அங்கு வந்து விட்டார்கள். அங்கு நாங்கள் போய் பார்க்கும்போது தாமோதரன் குப்புற கிடந்தால் உடலில் காயங்கள் இருந்தது மூக்கில் ரத்தம் வந்து கொண்டிருந்தது. அவரை அழைத்து வந்து நாங்கள் தனியார் மருத்துவமனையில் சேர்த்தோம். நான் அங்கிருந்து எனது ஆட்டோ ஸ்டாண்டிற்கு வந்துவிட்டேன். போலீசார் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்கள். மறுநாள் நான் காவல் நிலையத்திற்கு

சென்றேன்.அங்க போலீசார் தாமோதரன் இறந்த செய்தி சொன்னதன் பேரில் தெரிந்து கொண்டேன். புகார் கொடுக்கும் பொழுது நான் உடனிருந்தேன் படித்துக் காண்பித்தார்கள். அதன் பிறகு சாட்சி கையொப்பம் செய்தேன். புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான், போலீசார் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்கள். தாமோதரனுக்கு எப்படி காயங்கள் ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது மட்டையால் அடித்ததாக சொன்னார்கள்.

<u>எதிரிகள் 1, 2, 6, 7 தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. புகார்தாரர் போஜராஜா எனக்கு உறவினர் கிடையாது, பழக்கம் தான். நான் சம்பவயிடத்திற்கு செல்லும் பொழுது மாலை சுமார் 05.30 மணி இருக்கும், பக்கத்தில் கோயில் அமைந்துள்ளது. வீடு கிடையாது, சுற்றி தண்ணீர் தான். நாங்கள் சம்பவயிடத்திற்கு சென்றபோது வேறு யார் அங்கு இருந்தார்களா என்றால் வேறு யாரும் இல்லை. காயம் பட்ட தாமோதரன் மட்டும் அங்கு இருந்தார். நாங்கள் அங்கு சென்றபோது போஜராஜாவின் உறவினர்கள் நான்கு பேர் அங்கு வந்திருந்தார்கள்.

2. நான் பார்க்கும்போது காயம் பட்ட தாமோதரன் முனகிக் கொண்டிருந்தாரா என்றால் அவ்வாறு முனங்கவில்லை நாங்கள் தாமோதரன் என பெயர் சொல்லி அழைத்தோம். நான் தாமோதரனை பார்க்கும்போது அவர் என்ன உடை உடுத்திருந்தார் என்றால் பேண்ட், சட்டை போட்டிருந்தார். அந்த சட்டை, பேண்ட் என்ன நிறமென்று சொல்ல முடியாது. காவல் நிலையத்திற்கு நாங்கள் போஜராஜா மற்றும் அவரது உறவினர்கள் எல்லோரும் சென்றோம். புகாரை எழுதியவர் பாலமுருகன். சம்பவ இடத்திற்கு பக்கத்தில் கேட் போட்ட தோட்டம் எதுவும் கிடையாது.

3. அந்த இடத்தில் பனைமரம், சென்னை மரம் மற்றும் ஆலமரம் உள்ளது. அது தோப்பு என்பதால் மட்டை ஆகியவை கிடந்தது, நாங்கள் தடயங்கள் எதையும் தேடிப் பார்க்கவில்லை. ஆலமரத்திற்கு பக்கத்தில், வயல் எதுவும்

கிடையாது தோப்பு  மற்றும் ஆறு தான் உள்ளது. அந்த வழியாக ஆட்கள் நடைபயிற்சிக்கு  செல்வார்கள், ஆனால் நாங்கள் சென்றபோது அங்கு யாரும் இல்லை. லை நான் கூறுவது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், போஜராஜா எனது உறவினர் என்பதால் அவர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் கையில் வைத்திருந்த செல்போனை கொண்டு தாமோதரன் படுத்திருந்த இடத்தில் புகைப்படம் எதுவும் எடுத்தோமா என்றால் அவ்வாறு எடுக்கவில்லை. போலிசார் என்னை வழக்கு தொடர்பாக காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். புகார் கொடுத்த அன்றும் அதன் பிறகு இடையில் ஒரு நாளும் என்னை விசாரணை செய்தார்கள். புகார் கொடுத்த அன்று ஒரு நாள் விசாரணை செய்தார்கள் அதன் பிறகு ஒரு மாதம் கழித்து விசாரணை செய்தார்கள்.

<u>3–ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

தாமோதரன் குப்புற படுத்து இருந்ததால் அவருக்கு என்ன காயங்கள் ஏற்பட்டிருந்தது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். பாலமுருகன், தேவதாஸ் மற்றும் இரண்டு பேர் மொத்தம் நான்கு பேர் சேர்ந்து ஆட்டோவில் தூக்கி வைத்தார்கள். அப்பொழுது தாமோதரன் முகத்தை நான் பார்த்தேன், மூக்கில் இருந்து ரத்தம் வந்தது. அந்த ரத்தம் எனது ஆட்டோவில் படவில்லை.
சம்பவயிடத்தில் ரத்தம் தரையில் படியவில்லை. குப்புற படுத்திருந்ததால் மூக்கிலிருந்து ரத்தம் தரையில் படிந்து இருந்ததா என்றால், சாட்சி ரத்தத்தை பார்க்கவில்லை என தெரிவிக்கிறார் ஆட்டோவில் வித்யாமருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். கொஞ்ச நேரத்தில் அவரை 108 ஆம்புலன்ஸில் அங்கிருந்து அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். எவ்வளவு நேரம் மருத்துவமனையில் இருந்தார் என்று  எனக்கு தெரியாது சுமார் 30 நிமிடம்  இருந்திருப்பார்கள். நான் சுமார் 30 நிமிடம் அங்கு காத்திருந்தேன். 108 ஆம்புலன்ஸ் வந்து ஏற்றிச் சென்ற பிறகு நான் வந்து விட்டேன். வெளியில் வரும்போது என்ன சொல்லிவிட்டு வந்தார்கள் என்றால் அவ்வாறு எதுவும்

சொல்லவில்லை. எனக்கு வழக்கு பற்றி எந்த விவரங்களும் தெரியாது என்றும், நான் சொன்னது போல் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல.

**<u>மற்ற எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

(மேற்கண்ட குறுக்கு விசாரணையை தனது குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.27 19:35:51 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.